Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 118 | சனிக்கிழமை Saturday | 28.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# திமுவில் இணைந்தார் ஓ.பன்னீர்செல்வம்

## எம்.எம்.ஏ. பதவியையும் ராஜினாமா செய்தார்



சென்னை: மூன்று முறை தமிழகத்தின் முதலமைச்சராக பதவி வகித்தவரும், ஜெயலலிதாவின் தீவிர விசுவாசியாக அறியப்பட்டவருமான ஓ.பன்னீர்செல்வம் (ஓபிஎஸ்), திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.

ஓ.பன்னீர்செல்வத்துக்கு அதிமுகவில் இணைய இனி வாய்ப்பில்லை என்று தெரிந்த நிலையில், முதலமைச்சர் மு.க ஸ்டாலின் முன்னிலையில் அவர் திமுகவில் இணைந்துள்ளார். திமுகவின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் தமிழக அரசியலின் இந்த திருப்புமுனை நிகழ்வு நடைபெற்றுள்ளது.

அதிமுகபொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு அதிமுகவில் ஏற்பட்ட உட்கட்சி பூசல்கள் காரணமாக அக்கட்சி பல அணிகளாக பிரிந்தது. இருப்பினும் கட்சியை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து தேர்தலை சந்திக்கவுள்ளார்.

மறுபுறம், சசிகலா தனிக்கட்சி தொடங்கப்போவதாக சமீபத்தில் கொடியை அறிமுகப்படுத்தினார். கட்சி பெயர் குறித்த விவரங்கள் விரைவில் வெளியாகும் என்று தெரிவித்திருக்கிறார். டிடிவி தினகரன் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் கைகோர்த்துவிட்டார். இதனால் தனித்து விடப்பட்ட ஓ. பன்னீர்செல்வம் அதிமுக கூட்டணியில் இணைய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட நிலையில் அவை அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

எடப்பாடி பழனிசாமி அவரை கட்சியில் மீண்டும் சேர்க்கமுடியாது என திட்டவட்டமாக தெரிவித்துவிட்ட நிலையில், ஓபிஎஸ் புதிய கட்சி தொடங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதுகுறித்து அவர் எதுவும் பேசாமல் மௌனம் சாதித்து வந்தார். இருப்பினும் அவர் திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.கஸ்டாலினை அவ்வபோது சந்தித்து பேசி வந்தார்.அத்துடன்,"வருகிற தேர்தலிலும் திமுகதான் ஆட்சியமைக்கும்" என்று அண்மையில் ஆருடம் கூறியிருந்தார். இதனால் ஓபிஎஸ் எப்போது வேண்டுமானாலும் திமுகவுடன் கைகோர்ப்பார் என்று தமிழக அரசியலில் எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

அதற்கேற்ப, ஓபிஎஸ் ஆதரவாளர்கள் ஒருவர் பின் ஒருவராக திமுகவில் இணைந்த நிலையில், இன்று அண்ணா அறிவாலயம் வந்த ஓபிஎஸ், அங்கு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தம்மை திமுகவில் இணைத்துக் கொன்டார். முன்னதாக, திமுக மூத்த அமைச்சர் சேகர் பாபுடன் ஒரே காரில் பயணித்து ஓபிஎஸ் அண்ணா அறிவாலயம் வந்தடைந்தார்.

மறைந்த முதலமை ச்சரும், அதிமுக பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவின் தீவிர விசுவாசியாக அறியப்படுபவர் ஓபிஎஸ். அத்துடன் அவர் மூன்று முறைதமிழகத்தின் முதலமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.திமுகவின் பிரதான அரசியல் எதிரியாக இருந்து வரும் அதிமுகவைச் சேர்ந்த மூத்த தலைவரான ஓபிஎஸ திமுகவில் இணைந்துள்ளது தமிழக அரசியலில் திருப்புமுனையாக பார்க்கப்படுகிறது.

ஓபிஸ்ஸுடன் அவரது மகனும் எம்.பி.யுமான ரவீந்திரநாத், ஓபிஎஸ் ஆதரவுசட்டமன்றஉறுப்பினர் ஐயப்பன் ஆகியோரும் திமுகவில் தங்களை இணைத்துக்கொண்டனர். மேலும் இவர்களுடன் அவருடைய ஆதரவாளர்கள் பலரும் திமுகவில் இணைந்தனர். முதலமைச்சராக இருந்த ஒருவர் இன்னொரு கட்சிக்கு மாறி மற்றொரு தலைமையை ஏற்றுக் கொண்டது தமிழ்நாடு அரசியல் வரலாற்றிலேயே இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

### எம்எல்ஏ பதவி ராஜினாமா

முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்ததை தொடர்ந்து, தமது போடிநாயக்கனூர் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் பதவியை (எம்எல்ஏ) ராஜினாமா செய்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசனை இன்று நேரில் சந்தித்து தமது ராஜினாமா கடிதத்தை ஓபிஎஸ் அளித்தார். ஓபிஎஸ் ஆதரவுசட்டமன்றஉறுப்பினரான ஐயப்பனும் தனது உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பதவியை இன்று ராஜினாமா செய்தார்.

### பதவி கிடையாது

ஓ.பி.எஸ்-க்கு திமுகவில் எந்த கட்சி பதவியும் வழங்கப்படாது என்று அறிவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திமுக தேர்தலில் வெற்றிப்பெற்று மீண்டும் ஆட்சி அமைத்தால், அடுத்த சபாநாயகராக, அதிமுகவினர் வணங்கும் இடத்தில் ஓபிஎஸ் அமர வைக்கப்படுவார். சபாநாயகராக இருப்பவர் கட்சியில் எந்த பதவியிலும் இருக்கக்கூடாது என்பது விதி, ஓ.பி.எஸ்-ன் கோரிக்கையும் இதுதான் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# வாக்காளர் பட்டியலில் இப்போதுகூட பெயர் சேர்க்கலாம்!

## தலைமைத் தேர்தல் ஆணையர் தகவல்



தமிழகத்தில் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யும் 10 நாள்கள் முன்புவரை, வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கலாம் என்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் கூறினார்.

சென்னை தனியார் ஹோட்டலில் செய்தியாளர்களுடன் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார், 'வாக்காளர் பட்டியலில் மேலும் பெயர்களைச் சேர்க்க முடியுமா?' என்ற செய்தியாளரின் கேள்விக்கு பதிலளிக்கையில், "தகுதியான ஒருவர்எப்போதுவேண்டுமானாலும் வாக்காளர் பட்டியலில் தனது பெயரைச் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

இப்போது இறுதி வாக்காளர் பட்டியல் பிப். 23 அன்று வெளியான நிலையிலும், அதில் பெயர் இடம்பெறவில்லை என்றால் தகுதியுள்ள ஒருவர் படிவம் 6 மூலமாக உரிய ஆவணங்களுடன் தங்கள் பெயரைச் சேர்க்கலாம். படிவம் 7 மூலமாக நீக்கம் செய்யலாம், படிவம் 8 மூலமாக வாக்குச்சாவடி மாற்றத்திற்கு, தொகுதி மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

இந்த 3 படிவங்களும், தேர்தல் அறிவித்து வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கலுக்கு 10 நாள்களுக்கு முன்வரை சமர்ப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்து 7 முதல் 10 நாள்களுக்குள் சரிசெய்யப்படும். உங்கள் விண்ணப்பம் வந்தவுடன் அதை தேர்தலை அதிகாரிகள் அறிவிப்புப் பலகையில் ஒட்டுவார்கள். யாரும் ஆட்சேபனை தெரிவிக்காதபட்சத்தில் வேட்புமனு தாக்கல் இறுதிநாளுக்குள் முடிவு செய்யப்படும். வேட்புமனு தாக்கல் முடிந்தவுடன் அந்தந்த தொகுதி வாக்காளர் பட்டியல் வேட்பாளர்களுக்கு, வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் முகவர்களுக்கு வழங்கப்படும். அதேபோல திருமணம் ஆனவர்களும் எளிதாக ஆன்லைன் அல்லது தேர்தல் ஆணைய செயலி மூலமாக தங்களுடைய தொகுதி மாற்றத்திற்கு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். வாக்குச்சாவடி அலுவலர் நேரில் வந்து சரிபார்த்து உரிய நடவடிக்கை எடுப்பார்" என்று கூறினார்.

மேலும் பத்திரிகையாளர்களுக்குதபால்வாக்கு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செய்தியாளர்கள் கோரிக்கை வைத்ததற்கு, 'அதுகுறித்து ஆய்வு செய்து முடிவெடுக்கப்படும்' என்று கூறினார்.

தமிழகத்தில் வரும் பேரவைத் தேர்தலில் தேர்தல் அதிகாரிகள் அச்சமின்றி செயல்படலாம். சமூக ஊடங்கங்களில் பொய் செய்திகள் கண்காணிக்கப்படும்.

வாக்குபதிவின்போது 2 மணி நேரத்திற்கு ஒருமுறை வாக்குப்பதிவு சதவீதம் பதிவேற்றம் செய்யப்படும். வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படங்கள் இடம்பெறும். சாமானிய மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் மக்கள் வாக்களிக்கும் முறை எளிமையாக்கப்படும்.

வாக்குச்சாவடிகளில் குடிநீர்,கழிப்பறைவசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்

தற்போதுவரை எஸ்ஐஆர் பணிகளில் 267 புகார்கள் மட்டுமே வந்துள்ளன" என்று கூறினார்.

# தவெக தலைவர் விஜய்யின் மனைவி சங்கீதா விவாகரத்துக்கோரி மனு

## நடிகை ஒருவருடன் விஜய்க்கு தொடர்பு என புகார்



சென்னை: தவெக தலைவர் விஜய் நடிகையுடன் திருமணத்தை மீறிய உறவு கொண்டிருந்ததாக அவரின் மனைவி சங்கீதா விவாகரத்து கோரிய மனுவில் குற்றம்சாட்டியுள்ளார். இந்த விவகாரத்தை 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கண்டுபிடித்ததாக கூறியுள்ள சங்கீதா, அதன்பிறகும் இரக்கமே இல்லாமல் அந்த உறவை தொடர்ந்ததாக தெரிவித்திருக்கிறார்.

நடிகரும், தவெக தலைவருமான விஜய் மனைவி சங்கீதா விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்திருக்கிறார். செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு சங்கீதா மனு தாக்கல் செய்திருக்கிறார். நடிகர் விஜய் மற்றும் சங்கீதா இருவருக்கும் 1999ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இதன்பின் இவர்களுக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருக்கின்றனர்.

விஜய்யின் மகன் சஞ்சய் தற்போது சிக்மா என்ற படத்தை சந்தீப் கிஷனை வைத்து இயக்கி வருகிறார். இதனை லைகா நிறுவனம் தயாரித்து வருகிறது.

இந்த நிலையில் திருமணம் முடிந்து 27 ஆண்டுகளுக்கு பின் சங்கீதா விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் விஜய் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சங்கீதா முன் வைத்திருக்கிறார்.

அதன்படி, நடிகை ஒருவருடன் திருமணத்தை மீறிய உறவில் விஜய் இருப்பது ஏப்ரல் 2021ம் ஆண்டு எனக்கு தெரியவந்தது. இது வலியையும், மன உளைச்சலையும் கொடுத்தது. இது துரோகம் மற்றும் திருமண நம்பிக்கையை மீறுவதற்கு சமம்.நான் இந்தவிஷயத்தை கண்டுபிடித்த பிறகும் இரக்கமே இல்லாமல் அந்த உறவை தொடர்ந்தார். இதனால் நான் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

இதன்படி மார்ச் 20ஆம் தேதி விஜய் நேரில் ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றத்தில் தரப்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது. விஜய் நேரில் ஆஜராகவில்லை என்றாலும், அவர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கடந்த சில ஆண்டுகளாகவே விஜய்யிடம் இருந்து பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் சங்கீதா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடைசியாக விஜய் மற்றும் சங்கீதா தம்பதியினர் மாஸ்டர் படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில் பங்கேற்றனர். அதன்பின் விஜய்யின் எந்தப் படத்தின் விழாவிலும் சங்கீதா பங்கேற்கவில்லை. விஜய் கட்சி தொடங்கிய போதும் கூட அவரது பெற்றோர் பங்கேற்றனர். ஆனால் மனைவி சங்கீதா, மகன் சஞ்சய் மற்றும் மகள் திவ்யா என்று யாரும் பங்கேற்கவில்லை.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்



# ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த க்ரைம் கண்ட்ரோல் சமித்தியின் மாநில தலைவருக்கு புதுடெல்லியில் பாராட்டு




ஈரோடு மாவட்டத்தில் வசிக்கும் 'க்ரைம் கண்ட்ரோல் சமித்தி' தமிழ்நாடு மாநிலதலைவர் அக்பர் அலி, புதுடெல்லியில் செயல்படும் விஸ்வ யுவ கேந்திரா என்ற சர்வதேச இளைஞர் மையம் சார்பில் 'கார்ப்பரேட் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு' குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்திய அரசின் விதிகளின்படி, ஒவ்வொரு கார்ப்பரேட் நிறுவனமும் தனது லாபத்தில் 2 சதவீதத்தைச் சமூக மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காகச் செலவிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தும் நோக்கில், கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும்தன்னார்வதொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட விஸ்வ யுவ கேந்திரா இந்த வாய்ப்பை உருவாக்கியது.

இதில் இந்தியா முழுவதிலும் இருந்து 30-க்கும் மேற்பட்ட முன்னணி கார்ப்பரேட் நிறுவனப் பிரதிநிதிகளும், 250-க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். இந்நிகழ்வில் தமிழ்நாட்டின் கலந்துகொண்டு க்ரைம் கண்ட்ரோல் சமித்தியின் மாநில தலைவர் அக்பர் அலி பேசுகையில்,"உதவி தேவைப்படும் மனிதர்களுக்காக ஒரு உலகமே இங்கு அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறது; இதில் பங்கேற்று எனது எண்ணங்களைப் பகிர வாய்ப்பளித்தவிஸ்வயுவ கேந்திராவிற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார். மேலும், சிறு குறு தொழில்முனைவோரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அவர்களுக்குத் தடையற்ற, வட்டி இல்லாத கடன் வழங்கி உதவிட வேண்டும் என்ற மிக முக்கியமான கருத்தை அவர் முன்வைத்தார். இக்கருத்தை அங்கிருந்த முன்னணி கார்ப்பரேட் நிறுவனப் பிரதிநிதி ஒருவர் பாராட்டி ஆமோதித்ததுடன், இது குறித்த விரிவான திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இக்கோரிக்கை நிறைவேறும்பட்சத்தில் சிறு குறு தொழிலாளர்கள் பெரும் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.




தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் (26.02.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை, அம்மன்காட்டேஜில் முருங்கத்தொழுவு மற்றும் எக்கட்டாம்பாளையம் ஊராட்சிகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு E பட்டாவினை வழங்கினார். உடன் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் (26.02.2026) நேற்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் 9 மீட்டர் உயரம் கொண்ட சிறிய மின்கோபுர மின்விளக்கினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

# "பச்சிளம் குழந்தைக்குக் கூட பாதுகாப்பு இல்லாத திமுக அரசு..." தினகரன் விமர்சனம்



சென்னை: 'கிருஷ்ணகிரி அருகே இரண்டரை வயதுக் குழந்தையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்த திமுக நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார். பச்சிளம் குழந்தைக்குக்கூடபாதுகாப்பில்லாத திமுக அரசை வரும் தேர்தலில் வீட்டுக்கு அனுப்புவது தான் ஒரே தீர்வு' என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அருகே இரண்டரை வயதுக் குழந்தையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்திருப்பதாக திமுகவின் இளைஞரணி நிர்வாகி ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

பச்சிளம் குழந்தைகள், கல்லூரிக்குச் செல்லும் மாணவிகள், பணிக்குச் செல்லும் பெண்கள், வீட்டில் வசிக்கும் வயதான முதியவர்கள் என யாருக்குமே பாதுகாப்பற்ற மாநிலமாகத் தமிழகத்தை மாற்றி விட்டு, பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் எனப் பெருமை பேசுவதும், பல கோடி ரூபாய் செலவில் விளம்பரம் செய்வதும் வெட்கக் கேடானது.

கஞ்சா விற்பனையில் தொடங்கி கள்ளச்சாராயம் காய்ச்சுவது உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்த திமுக நிர்வாகிகளைக் கண்டும் காணாமல் அலட்சியமாக இருந்ததன் விளைவே, தற்போது அரங்கேறியிருக்கும் இந்த கொடூர சம்பவத்திற்கு அடிப்படை காரணம் எனப் பொதுமக்கள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

# மதுராந்தகம் ஏரியை ஆழப்படுத்தும் பணியை காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்

செங்கல்பட்டு மாவட்டம் மாவட்டத்தில் பெரிய ஏரியன மதுராந்தகம் ஏரியை ஆழப் படுத்த வேண்டும் கரை மேம்படுத்த வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்திருந்த நிலையில் கடந்த தேர்தலின் போது வாக்குறுதியாக அளித்த தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்காக கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு நிதியாக ரூபாய் 120.23கோடி மதிப்பீட்டில் ஏரியை ஆழப்படுத்தி கொள்ளளவை உயர்த்திடும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள மறு கட்டுமான பணிகள் நிறைவடைந்ததால் தற்போது விவசாய பயன்பாட்டிற்கு ஏரி திறப்பு காணொளி மூலம் முதலமைச்சர் திறந்து வைத்தார்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் மாவட்டத்தில் பெரிய ஏரியன மதுராந்தகம் ஏரியை ஆழப்படுத்தி மறு சீரமைக்க வேண்டும் என இப்மக்கள் பல ஆண்டுகளாககோரிக்கைவைத்திருந்த நிலையில் கடந்த தேர்தலின்போது வாக்குறுதியாக அளித்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் இதற்காக மூன்று ஆண்டுக்கு முன்பு 120.23 கோடியை நிதி ஒதுக்கப்பட்டு 3 ஆண்டுகளாக பணி நடைபெற்றதுப இந்த ஏரியை ஆழப்படுத்தி கொள்ளளவை உயர்த்திடும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள மறு கட்டுமான பணி நிறைவடைந்து உள்ளது இதை இன்று தமிழக முதலமைச்சர்கள் காணொளிமூலம்திறந்து வைத்தார் இன்று முதல் விவசாயிகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது

# தூத்துக்குடி மாநகராட்சி பட்ஜெட் தாக்கலில் அதிமுக வெளிநடப்பு



தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் சாதாரண கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் 2026 – 27 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு அறிக்கையை மேயர் பட்ஜெட்டை வாசிக்க தொடங்கியதும் எதிர்க்கட்சி அதிமுக கொறடாவும் வழக்கறிஞருமான மந்திரமூர்த்தி எழுந்து கடந்த ஐந்தாண்டு காலம் எந்த வளர்ச்சி பணியும் நடக்கவில்லை இதை உண்மையாக கண்டிக்கிறோம் என்று கோஷம் எழுப்பினார். அவரைத் தொடர்ந்து அதிமுக கவுன்சிலர்கள் கையில் திமுக அரசு எதிர்க்கும் வகையில் துண்டு பிரசுரத்தை வைத்துக்கொண்டு வெளிநடப்பு செய்தனர். இதில் கவுன்சிலர்கள் வெற்றி செல்வன் ஜெயலட்சுமி பத்மாவதி ஜெயராணி 3 பெண்கள் உட்பட ஐந்து பேர்வெளிநடப்புசெய்தனர்.

பின்னர் இது குறித்து எதிர்க்கட்சி அதிமுக கொறடாவும் வழக்கறிஞருமான மந்திரமூர்த்தி தெரிவிக்கையில்: ஐந்து ஆண்டு திமுக ஆட்சியில் எந்த திட்டங்களும் தூத்துக்குடி மாநகராட்சி கொண்டு வரவில்லை எனவே அதை வலியுறுத்தியும் மேலும் சொத்து வரி தொழில் வரி குடிநீர் வரி மின்சார வரி என பல்வேறு வரிகள் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். தொடர்ந்து தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் சேதமாகிய சாலைகள் மற்றும் பாதாள சாக்கடை ஆகிய வசதியை இதுவரை மாநகராட்சி முறையாக சரி செய்யவில்லை இதனால் பலபகுதியில் உயிர் சேதம் ஏற்படுகிறது நேற்று முன் தினம் விஷவாயு தாக்கி மாநகராட்சி ஊழியர் உயிரிழந்து உள்ளார். இந்த மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்தும் ஐந்தாண்டு திமுக ஆட்சியில் கூறிய எதுவும் நிறைவேற்றவில்லை மேலும் கடந்த அதிமுக அம்மாவின் ஆட்சியில் எல்லா விதமான நல்ல திட்டங்களை செய்து கொடுத்துள்ளோம். ஆனால் இந்த திமுக அரசு எந்த திட்டங்களையும் கொண்டு வரவில்லை இதனால் தூத்துக்குடி மாநகராட்சி பட்ஜெட் தாக்கலில் வெளிநடப்பு செய்தோம் என்று தெரிவித்தார்.



கடலூர் மாவட்டம் வேப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், நபார்டு வங்கி நிதி 1 கோடியே 41 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்ட, ஆறு வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடத்தை தமிழக முதல்வர் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்த நிலையில், பள்ளி வளாகத்தில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.ஆர். ராதாகிருஷ்ணன் குத்துவிளக்கு ஏற்றி வைத்து திறந்து வைத்தார். அப்போது, தலைமையாசிரியர் பரமசிவம், பள்ளி மேலாண்மை குழு தலைவர் முத்துலட்சுமி, பள்ளி மேலாண்மை குழு உறுப்பினரும் விசிக நிர்வாகியுமான வேப்பூர் அர்ச்சுணன், திமுக கிளைச் செயலாளர் ஹரிசன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.6 கோடி மதிப்பிலான ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல்



தாய்லாந்தின் பாங் கா க்கி லிருந்து நேற்று முன்தினம் இரவு சென்னை க்கு ஏர் ஏசியா விமானத்தில் வந்த பயணி களை சுங்கத் துறை ஏர் இன்டெலி ஜெ ன்ட் அதி காரிகள் கண்காணித் தனர். அப் போது, ஓர் இளைஞரை சந் தேக த்தின்பேரில் தடு த்து நிறுத்தி விசாரித் தனர்.

அ ந்த இளைஞர் முன் னு க்குப் பின் முரணாக பதி லளித்ததால், அவரது உடைமைகளைசோதனை யிட் டனர். அவரது சூட் கே ஸைத் திறந்து பார்த்த போ து , அதில் பாலிதீன் கவர் களால் சுற்றப்பட் டி ருந்த 15 பார்சல்கள் மறைத்து வைக் கப்பட் டிருந் தது கண்டுபிடிக்கப் பட்டது.

அவ ற்றை பிரித்துப் பா ர்த்தபோது, அதில் 5.9 கிலோ எடையுள்ள உயர்த ர ஹைட்ரோபோனிக் க ஞ்சா இரு ந்தது தெரிய வ ந் தது . இதுகுறித்து, இ ளை ஞ ரிடம் நடத்திய வி சா ரணையி ல், அவர் கே ர ளாவை ச் சேர்ந்தவர் எ ன் பதும்,பணத் துக்காக கு ரு வியா க செயல்பட் டதும் தெரியவந்தது.

மேலும், இந்த கஞ் சாவை பெ ற் றுக் கொள்ள வி மா ன நிலை ய த் துக்கு வெளி யே தயாராக ஒரு வ ர் காத்திருப்ப தா க வும் , அவ ரிடம் இ ந்த க ஞ்சா பொட் ட ல ங் களை ஒப் ப டைக்க இருப்பதாகவும் அந்த இளைஞர் தெரிவித் துள்ளார்.

தொ டர்ந்து விசாரணை: இதை யடுத்து விமான நிலை யத்துக்கு வெளியே காத் திருக்கும் அந்த நபரைப் பிடிக்க அதிகாரிகள் வி ரைந்தன ர். அத ற்குள் கேரள இளைஞர் பிடிபட்ட தகவ லறிந்த அந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென் றார்.

## குமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் கொட்டாரத்தில் வாலிபர் அடித்துக்கொலை? போலீசார் விசாரணை



திருநெல்வேலி மாவட்டம் கீழபிள்ளையார்குளம் பகுதியை சேர்ந்தவர் செல்லபாண்டி(33). கிட்டாச்சி டிரைவரான இவர் நேற்று மலையன்விளை பகுதியை சேர்ந்த கண்ணன் என்பவருக்கு சொந்தமான கிட்டாச்சியை ஓட்டுவதற்காக வந்துள்ளார்.

கிட்டாச்சி உரிமையாளர் கண்ணன் கொட்டாரத்தில் இருந்து பெரியவிளை செல்லும் சாலை, பெட்ரோல் பங்கிற்கு அருகில் உள்ள இடத்தில் தனக்கு சொந்தமான வாகங்களை நிறுத்துவது வழக்கம்.

அதன் அருகில் உள்ள கட்டத்தில் வேலைக்காக வந்த செல்லபாண்டியை தங்க வைத்ததாக கூறப்படுகிறது.இந்நிலையில் இன்று காலையில் கட்டிடத்தின் முன்பு இரத்த காயங்களுடன் செல்லபாண்டி இறந்து கிடந்தார்.

அந்த வழியாக சென்றவர்கள் சம்பவம் குறித்து கன்னியாகுமரி போலீசாருக்குதகவல் தெரிவித்தனர்.

ஏடிஎஸ்பி மதியழகன், மற்றும் டிஎஸ்பி ஜெயச்சந்திரன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து உடலை கைப்பற்றி ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து மோப்பநாய், தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர்.அவர்கள் அப்பகுதியை சுற்றி ஆய்வு செய்தனர்.இறந்து கிடந்த செல்ல பாண்டியின் கண்ணனத்தில் கம்பிகள் குத்தப்படிருந்தது.அதேபோல் கம்பால் முகத்தில் அடிக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் அவர் கிடந்ததும் தெரியவந்தது.

இதனால் செல்லபாண்டி கொலை செய்யபட்டிருக்க வாய்பிருக்கால் என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காரைக்குடியில் மூதாட்டியிடம் செயின் பறிக்க முயற்சி – இருவர் தப்பியோட்டம்




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனி வாசல் முனீஸ்வரன் கோவில் தெருவில் நடந்து சென்ற மூதாட்டியை இருசக்கர வாகனத்தில் பின்தொடர்ந்து வந்த இரு இளைஞர்கள், அவர் அணிந்திருந்த தங்க சங்கிலியை பறிக்க முயன்று தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹெல்மெட் மற்றும் முகமூடி அணிந்திருந்த குற்றவாளிகள் சங்கிலி பறிக்க முயன்றபோது, மூதாட்டி "திருடன், திருடன்" என கூச்சலிட்டதால் அப்பகுதி மக்கள் உஷாரானனர். இதையடுத்து குற்றவாளிகள் மூதாட்டியை அங்கேயே விட்டுவிட்டு,அதிவேகத்தில் இருசக்கர வாகனத்தில் பிரதானசாலையான VOC ரோட்டின் குறுக்கேபாய்ந்து தப்பிச் சென்றனர்.

இந்த சம்பவம் குறித்து மூதாட்டி காவல்துறையில் புகார் அளித்துள்ளார்.காவல்துறையினர் சிசிடிவி கேமரா பதிவுகளின் அடிப்படையில் குற்றவாளிகளை தீவிரமாகத் தேடி வருகின்றனர்.



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் "ஸ்ரீஅன்னை ஜேகேகே சம்பூரணியம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் சிவில் துறைத்தலைவர் பேராசிரியர் ராதாகிருஷ்ணன் அவர்களின் நீண்ட கால கல்வி மற்றும் சமூகத்தின் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "நேதாஜியின் சிறப்பு விருது" மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் (26.02.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை பேரூராட்சி அலுவலகம் அருகில் 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் 9 மீட்டர் உயரம் கொண்ட சிறிய மின்கோபுர மின்விளக்கினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (27.02.2026) நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பர்கூர் பழங்குடி உழவர்கள் மேம்பாட்டுச்சங்கங்களைச் சேர்ந்த விவசாய பயனாளிகளுக்கு டிராக்டர், சுழல் கலப்பை, கொத்து கலப்பை, டிப்பிங் டிராய்லர், காபி கொட்டை பதனம் செய்யும் இயந்திர தொகுப்பு உள்ளிட்ட விவசாய கருவிகளை வழங்கினார்.

## தமிழக முற்போக்கு மக்கள் கட்சி சார்பாக

# கோவை பந்தயசாலையில் கன்டன ஆர்ப்பாட்டம்



தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாளை, பந்தயசாலையில் உள்ள தெற்கு வட்டாட்சியர் அலுவலகம்முன்பாககன்டனஆர்ப்பாட்டம்நடைபெற உள்ளது.இந்தஆர்ப்பாட்டத்தில்இக்கட்சியின்மாநில தலைவர் வழக்கறிஞர் சக்தி வேல் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

நிகழ்ச்சியை இக்கட்சியின் மாநில துணை தலைவரும் வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் தலைமை தாங்க உள்ளார். இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக கோவை மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலங்களிலும் பணிபுரியும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் 3500வரை,பணி நிரந்தரம்செய்யப்பட வேண்டும்எனவும்,தாட்கோஅலுவலகம்மூலம்எஸ்.சி மற்றும் எஸ்டி மக்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் காலதாமதம் இல்லாமல் கடன் வழங்க வேண்டும் எனவும், தமிழகம் முழுவதும் உள்ள ஒன்றே முக்கால் கோடி தேவேந்திர குல வேளாளர் வேளாளர்சமூகமக்களை,எஸ்.சிபட்டியலில் இருந்து பிசிஅல்லதுஎம்.பி.சிபட்டியில்சேர்க்கப்படவேண்டும் எனவும், கோவை செல்வபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அலுவலகத்தில்,நடைபெறும்முறைகேடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், இதில் தகுதியானவர்களுக்கு உடனடியாக அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும், கோவை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசின் மூலம் பட்டா வழங்கப்பட்டுள்ளது ஆனால், இன்று வரை அதற்கான இடத்தை அளவீடு செய்து தரப்படவில்லை எனவும், கோவை நீதிமன்ற வளாகம் முன்பு சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவருக்கு முழு வெண்கல சிலை அமைத்து தரப்பட வேண்டும் என என்பது, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதுஇதில்சமூகஆர்வலர்நாகேந்திரன்,இந்திரன் இதழ் ஆசிரியர் உலகநாதன், செட்டி அசோக் பண்ணாடி,உள்ளிட்டபலர்கலந்துகொண்டுகண்டன உரையாற்ற உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடி வடக்கு ஒன்றியம் பாரதிய ஜனதா கட்சி சார்பில் சக்தி கேந்திர தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது

தூத்துக்குடி பாரதிய ஜனதா கட்சி வடக்கு மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்றம் சார்பில் மத்திய அரசு சாதனை மற்றும் பட்ஜெட் விளக்க சக்தி கேந்திர தெருமுனைக்கூட்டம் ஒன்றிய செயலாளர் வடக்கு சக்தி கேந்திர பொறுப்பாளர் முருகராஜ் தலைமையில் ஹவுங்போர்டு டி.டி.சி.டிப்போ பகுதியில் நடைபெற்றது.



பிரச்சார கூட்டத்தில் திமுக அரசு மின்கட்டணம் உயர்வு, பால் விலை உயர்வு, சொத்து வரி உயர்வு,குடிநீர் கட்டண உயர்வு என்று அனைத்தையும் உயர்த்தியுள்ளது. மேலும் தமிழகத்திற்கும் பல நல்ல திட்டங்களை பாஜக அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தால் செயல்படுத்தும் என்று பேசினர்.

ஒன்றிய துணைத் தலைவர் இசக்கியப்பன் வரவேற்புரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளர்கள் பாஜக மாவட்ட பொதுச் செயலாளர் சட்டமன்ற அமைப்பாளர் வீரமணி, பாஜக முன்னாள் மாவட்ட செயலாளர் மான்சிங், பாஜக சட்டமன்ற இணை அமைப்பாளர் ஒன்றிய பிரயாரி செல்வராஜ், அதிமுக முன்னாள் இணைச் செயலாளர் சிவக்குமார், அ.ம.மு.க 2வது வார்டு வட்ட செயலாளர் பொன்பாண்டி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

ஒன்றிய பொதுச் செயலாளர் கனகராஜ் நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சரவணகுமார், முன்னாள் ராணுவ பிரிவு ராஜன்,விவசாய ஒன்றிய அணி பொன்னுதுரை, பட்டியல் அணி ஒன்றிய தலைவர் காசிதுரை, (OBC) அணி மாவட்ட செயலாளர் முருகேசன், திருமணி கிருஷ்ணன், மதிபிரகாசம் மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடுமாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிநேற்று(27.02.2026)மாவட்டஆட்சியர் அலுவலக வளாகத்தில் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பர்கூர் மற்றும் மாவநத்தம் பழங்குடி உழவர்கள் மேம்பாட்டுச்சங்கங்களைச் சேர்ந்த விவசாய பயனாளிகளுக்கு விவசாய கருவிகளை வழங்கி, கலந்துரையாடினார்.

# ஓபிஎஸ் பாஜகவில் சேராமல் திராவிட பாசறைக்கு வந்திருக்கிறார் மதுரை விமான நிலையத்தில் திருமாவளவன் பேட்டி



விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளன் செய்தியாளர் சந்திப்பு

மூன்று முறை முதலமைச்சர்இறந்தவர் ஓபிஎஸ்திமுகவில்இணைந்தார் கேள்விக்கு

ஓபிஎஸ்அவர்கள் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர் திராவிட கழகத்திற்கு மட்டுமல்ல அதன் கூட்டணி கட்சிக்கும் கூடுதல்பலம்சென்றதாக நினைக்கிறேன் இதனை வரவேற்கிறோம்

எங்களது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்

குறிப்பாக எடப்பாடி அவர்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும் என்று நினைத்தார் அது நிறைவேறாத நிலையில் பாஜகவில் போய் சேர நினைக்காமல் திமுகவில் சேர்ந்துள்ளார் என்பது அவர் மீதான நன்மதிப்பை மேலும் பெருமை சேர்க்கும்

அவர் திராவிட பாரம்பரியத்தில் எம்ஜிஆர் ஜெயலலிதா ஆகிய தலைவர்களோடு பணியாற்றி வாழ்ந்தவர் அத்தகைய பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையில் வலது சாரி அமைப்புகளோடு தன்னை இணைத்துக் கொள்ளாமல் திமுகவில் இணைத்தது வரவேற்கத்தக்கது

*நாளை மறுநாள் பிரதமர் வருகை குறித்த கேள்வி திருப்பரங்குன்றம் கோயிலுக்குசெல்கிறார் என்ற கேள்விக்கு*

பிரதமர்போகிறஎல்லா மாநிலங்களிலும் ஏதேனும் கோவிலுக்கு சென்று வழிபாடு செய்வது வழக்கமான ஒன்றுதான் அந்த வகையிலே அவர் திருப்பரங்குன்றம் முருகனை தரிசிப்பது நமக்கு மகிழ்ச்சி

ஆனால் பாஜகவின் அரசியல் யுக்திகளில் இதுவும் ஒன்று என்பதை நாம்கவனத்தில்கொள்ள வேண்டும்

மக்களிடம் இயல்பாக உள்ள மத உணர்வுகளை தம்முடைய அரசியல் ஆதாயத்திற்கு பயன்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் சிறுபான்மை சமூகத்திற்கு எதிராக வெறுப்பு அரசியலை வலுப்படுத்தும் வகையில் அவர்களின் வாடிக்கையான போக்கு

முருகனை தரிசிக்க வருகிறார் பிரதமர் என்பதை விட இந்த சமூகத்தின் மீது தனக்கு பேரளவில் அன்பு இருக்கிறது என்பதைப் போல ஒரு தோற்றத்தை உருவாக்கிக் கொண்டு அதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒரு நிலைபாட்டை உறுதிப்படுத்துகிறார்

என்பதை நான் கருதுகிறேன்

ஆனால் தமிழ்நாட்டில் அந்த அரசியல் யுத்திகள் எடுபடாது

கிட்டத்தட்ட இது போன்றகால்நூற்றாண்டு காலமாக இது போன்ற பிரச்சனையே செய்து இருக்கிறார்கள். எதுவும் போனியாகாது உள்ளது என்பதுதான் உண்மை

2026 சட்டமன்ற தேர்தலில் பொருத்தவரையில் இருந்து இரண்டு கருத்துகளுக்கு எதிரான ஒன்று முதலமைச்சர் உறுதிப்பட அறிவுறுத்திருக்கிறார் மதச்சார்பின்மைக்கு முற்போக்கு கூட்டணிக்கும் மதவாத அரசியலை உயர்த்தி பிடிக்கக்கூடிய பாரதிய ஜனதா அதன் கூட்டணி கட்சிகளுக்கும் கருத்தியல் போர் தான் நாம் சந்திக்க இருக்கிற தேர்தல்

எனவே தமிழ்நாட்டு மக்கள் மத நம்பிக்கை உள்ளவர்களாகவும் மதவெறி அரசியலுக்கு ஒருபோது இடம் தர மாட்டார்கள்

அரவிந்த் கெஜ்டிவால் சிஸ்சோடியா இருவரும் டெல்லி மதுபானத்தில் இருந்து விடுதலை பெற்றுள்ளனர் இது ஆறுதல் அளிக்கும் வகையில் இருந்தது

அவர்கள் அவர்கள் குற்றம் அற்றவர்கள் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது

அமலாக்கத்துறை CBI என்ற மையக் புலனாய்வுத் துறையில் டெல்லியில் உள்ளே இருக்கக்கூடிய பாசிச பாஜக அரசு கட்டுப்பாட்டில் இருக்கிற அமைப்பில் பாஜகவின் அரசியல் பாகைவர்களை வேட்டையாட கூடிய அமைப்பு பொய் வழக்குகளை கொடுத்து அவர்களுக்கு நெருக்கடியை கொடுக்கக்கூடியவிமர்சனங்கள் உண்மையாக கொண்டிருக்கிறது

அந்த அமைப்பின் சுதந்திரமாக ஏற்கவில்லை இதிலிருந்து வெளிச்சமாகி இருக்கிறது

இதுபோன்ற போக்கினை ஜனநாயக சக்தி அவர்களை சதி முயற்சி முடிவெடுக்க இருக்க வேண்டும் என்பதுதான் விடுதலை சிறுத்தைகள் தொடர்ந்து வலியுறுத்தக்கூடிய கருத்து

*சசிகலாகட்சிதொடங்கியது தொடர்பாக கேள்விக்கு*

இன்னும் கட்சியின் பெயரை அறிவிக்கப்படவில்லை கட்சியை முறைப்படி அவர் அறிவிப்பு செய்த பிறகுதான் அவருக்கான மக்கள் ஆதரவு நிலை என்ன என்பதை தெரிவிக்க முடியும்

இது எப்படி இருந்தாலும் அந்த அறிவிப்பு புதிதாக துவங்க உள்ள கட்சி திமுக கூட்டணிக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது

# சிறுப்பாக்கத்தில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா அமமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்



கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்த சிறுப்பாக்கத்தில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதாவின் 78-வது பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும்பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. சிறுப்பாக்கம் பேருந்து நிலையத்தில் நடைபெற்றஇந்தவிழாவிற்கு, அமமுக மாவட்டச் செயலாளர் அக்ரி முருகேசன் தலைமை தாங்கி, ஏழை, எளிய பொதுமக்களுக்கு சேலை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

மங்களூர் ஒன்றியச் செயலாளர் எஸ்டி. முருகன் முன்னிலை வகிக்க, ஒன்றிய துணைச் செயலாளர்கள் கார்த்திகேயன் மற்றும்சரவணன் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். இக்கூட்டத்தில் மாநில மருத்துவர் அணி நிர்வாகி டாக்டர்ராஜாபழனிவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் பாஜக மாவட்டத் தலைவருமான தமிழழகன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்று, ஜெயலலிதாவின் மக்கள் நலப் பணிகள்,மக்கள் செல்வன் டிடிவி தினகரன் அவர்களின் அரசியல் பணிகள் மற்றும் அரசியல் சாதனைகளை நினைவு கூர்ந்து உரையாற்றினர்.

விழாவில் பாஜக மாவட்டச் செயலாளர்கள் அடரி சிலம்பரசன், நாகராஜ், சிறுபாக்கம் குமரேசன், சசிகுமார் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். இதில் அமமுக நிர்வாகிகள் உதயா, வீரமணி, பெரியசாமி, ஐயப்பன், ராஜேந்திரன், முருகன், செல்லதுரை, ஷாஜகான் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியின் மங்களூர் ஒன்றியச் செயலாளர்கோபி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் முக்கியப் பொறுப்பாளர்களும், கட்சித் தொண்டர்களும் பெருந்திரளாகக்கலந்து கொண்டனர். விழாவின் நிறைவாக பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## சூனாம்பேட்டில்

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழா



செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கொளத்தூர் P.இரவி அவர்களின் முன்னிலையில், சூனாம்பேடு பத்தாவது வார்டு கிளைக் கழகம், சித்தாமூர் கிழக்கு ஒன்றியத்தின் மாவட்ட பிரதிநிதியும் முன்னாள் வார்டு உறுப்பினருமான மஞ்சு சிவக்குமார், மற்றும் செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் அண்ணா தொழிற்சங்க மாவட்ட இணைச் செயலாளர் மற்றும் பத்தாவது வார்டு கிளைச் செயலாளருமான சூனாம்பேடுV.சிவக்குமார்.ஆகியோரின்ஏற்பாட்டில்

மக்களால் நான் மக்களுக்காகவே நான் என்ற தவ வாழ்வு வாழ்ந்து மறைந்தாலும், நமது நெஞ்சமெல்லாம்நிறைந்துவாழ்ந்துகொண்டிருக்கும் உன்னததாய்,உலகம்போற்றும்எங்கள் உத்தமத்தாய், எங்கள் தங்க தாரகையின் 78 ஆவது பிறந்தநாளை அந்தப் பகுதியை பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஒன்றுகூடி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கிளைக் கழக நிர்வாகிகள் .வேலு,E.கருணாநிதி, முனுசாமி , பாஸ்கரன்,ரமேஷ்,ராணி,சுலோச்சனா,உள்ளிட்டோர் ஏராளமானோர் கிளைக் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

# மதுரை DRM ஓம்பிரகாஷ் மீனா காரைக்குடி வருகை; ரெயில் வசதிகள் மேம்பாடு குறித்து மனு

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ரயில் நிலையத்திற்கு இன்று (பிப்-27) காலை 10 மணியளவில் மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் ஓம்பிரகாஷ் மீனா வருகை தந்தார். அவரை காரைக்குடி ரயில் பயணிகள் நலச்சங்க செயலாளர் கோவிந்தசாமி,காரைக்குடி தொழில் வணிகக் கழகத் தலைவர் சாமிதிராவிடமணி, செயலாளர் எஸ். கண்ணப்பன், துணைத் தலைவர் ஜி.டி.எஸ். சத்தியமூர்த்தி, இணைச் செயலாளர் ஏ.ஆர். கந்தசாமி உள்ளிட்டோர் பயனாடை அணிவித்து வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து ரயில் வசதிகள் மேம்பாடு தொடர்பாக உயர் அதிகாரியிடம் மனு வழங்கப்பட்டது.





காரைக்குடி ரயில் நிலையத்தில் டிக்கெட் கவுண்டர் அருகே அமைக்கப்பட்டுள்ள புதிய நடைமேம்பாலத்தில் மின்தூக்கி (லிப்ட்) வசதி ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், சென்னை-இராமேசுவரம் இடையே "வந்தே பாரத்" அதிவேக ரயிலை விரைவில் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. "வந்தே பாரத்" ரயில் சேவையை விரைவில் இயக்க அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் (26.02.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலைஊராட்சிஒன்றியத்திற்குட்பட்டமுருங்கத்தொழுவுஊராட்சி,பூலக்காடுபகுதியில்சமுதாயகிணற்றிலிருந்து முகாசிபிடாரியூர் ஊராட்சிக்கு குடிநீர்திட்டப்பணிகள், முருங்கத்தொழுவு குடியிருப்பு பிரதான சாலையில் கான்கிரீட் வடிகால் அமைக்கும் பணி, திருமலை நகரில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் உள்ளிட்ட பணிகளை துவக்கி வைத்தார்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (26.02.2026) காங்கயம் ஊராட்சி ஒன்றியம், பரஞ்சேர்வழி குருக்கள்பாளையம் சாலை முதல் நொய்யல் பூச்சகாட்டுவலசு வரை (வழி) தப்பயன்காடு வரையிலான கட்டப்பட்ட உயர்மட்ட பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.



தென்காசி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட வேண்டும் என்கிற விருப்பமனு வை அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ பத்மநாதன் அவர்கள் வழங்கினார்

## போதைப்பொருள் இல்லா சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் 8 வடிவத்தில் 16 மணி நேரம், 40 நிமிடங்கள் சைக்கிள் ஓட்டி உலகசாதனை

### புதுச்சேரி ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் நிறுவனம் அங்கீகரித்தது



சேலம் மாவட்டம் நடுவலூரைச் சேர்ந்தவர் கல்லூரி மாணவர் சூரியா. கல்லூரியில் படித்து வரும் இவர், ஏற்கனவே பல்வேறு உலக சாதனைகளை செய்துள்ளார். இந்த நிலையில் தற்போது வைப்ரக்ஸ் சைக்கிளிங் அகாடமி மற்றும் கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் கல்வி நிறுவனங்களின் ரோட்ரேக்ட் கிளப்புடன் இணைந்து போதைப் பொருள் இல்லா சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் ஏற்படுத்தபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றார். இவர் தொடர்ந்து ஒரே இடத்தில், 8 வடிவத்தில் 16 மணி நேரம் 40 நிமிடங்கள் அதாவது 1000 நிமிடங்கள் சைக்கிள் ஓட்டி உலகசாதனை முயற்சியில் ஈடுபட்டார்.

பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள யுனைடெட் கல்வி நிறுவன வளாகத்தில் காலை 6 மணியளவில் துவங்கிய இந்த உலக சாதனை நிகழ்ச்சியை, யுனைடெட் கல்வி நிறுவனங்களின் இயக்குநர் முனைவர் சிவக்குமார் மற்றும் டீன் சர்மிளா ஆகியோர் மாணவருக்கு கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்து தொடங்கிவைத்தனர். காலை முதல் இரவு வரை நடைபெற்ற இந்த சாதனை நிகழ்ச்சியில் மாணவர் சூரியாவை ஊக்குவிக்கும் நோக்கில் ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒரு முறை யுனைடெட் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பள்ளி, கலைக்கல்லூரி, நர்சிங் கல்லூரி, பிசியோதெரபி கல்லூரி, பார்மஸி கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகள் வந்திருந்து கைகளைத் தட்டி உற்சாகப்படுத்தினர். மேலும் அவர்களுக்கு போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தியதுடன் சைக்கிள் ஓட்டுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. காலை 6 மணிக்கு சைக்கிள் ஓட்டத் துவங்கிய மாணவர் இரவு 10 மணி 40 நிமிடம் வரை ஓட்டினார். தொடர்ந்து, 16 மணி நேரம் 40 நிமிடங்கள் அதாவது 1000 நிமிடங்கள் 8 வடிவில் ஒரே இடத்தில் தொடர்ந்து சைக்கிள் ஓட்டி சாதனை புரிந்தார்

இவரது உலக சாதனை முயற்சியை ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் நிறுவனம் அங்கீகரித்துள்ளது. இதையடுத்து சாதனை முயற்சியினை பார்வையிட்ட புதுச்சேரி ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் நிறுவன தலைவர் கலைவாணி, கோவை மாவட்ட முதன்மை ஒருங்கிணைப்பாளர் கீதா தயாளன் ஆகியோர் சூரியாவின் சாதனையை அங்கீகரித்து மெடல் மற்றும் ஐகான் ரெக்கார்டு ஹோல்டர் என்ற விருதும், வேலூர் முத்தமிழ் சங்கம் சார்பில் சாதனைச் செம்மல் விருதும் வழங்கி கவுரவித்தனர். மேலும் இவரது உலக சாதனைக்கான சான்றிதழ் விரைவில் வழங்கப்படும் என தெரிவித்தனர். இதில், யுனைடெட் கல்வி நிறுவன நிறுவனர் மற்றும் தலைவர் சண்முகம், துணைத் தலைவர் மைதிலி சண்முகம், ரோக்ட்ராக்ட் கிளப் பொருப்பாளர் கார்த்திகேயன், உடற்கல்வி இயக்குநர் பிரதீப் உள்பட யுனைடெட் கல்வி நிறுவன முதல்வர்கள், ஆசிரியர்கள் பலர் கலந்துகொண்டனர்

## திட்டக்குடி அருகே 3 புதிய நியாய விலைக்கடைகள்: அமைச்சர் சி.வெ. கணேசன் திறந்து வைத்தார்



கடலூர் மாவட்டம் திட்டக்குடி அடுத்த கழுதூர், ம.புடையூர் மற்றும் தொழுதூர் ஆகிய கிராமங்களில் தமிழக அரசின் சார்பில் புதிதாக அமைக்கப்பட்ட நியாய விலைக் கடைகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேற்று பிப்ரவரி 27 வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

கழுதூர் கிராமத்தில் நடைபெற்ற முதல் நிகழ்ச்சியில் புதிய கடையைத் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து ம.புடையூர் மற்றும் தொழுதூர் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற விழாக்களிலும் அமைச்சர் கலந்துகொண்டு புதிய கடைகளைத் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில், தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கி கூறி, பொதுமக்கள் இந்த வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில் திட்டக்குடி வட்டாட்சியர் உதயகுமார், மங்களூர் பி.டி.ஓ சண்முக சிகாமணி, ஒன்றியச் செயலாளர் அடரி சின்ன சாமி, திட்டக்குடி நகரச் செயலாளர் பரமகுரு, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் கே.என்.டி. சுகுணா சங்கர், கழுதூர் ஊராட்சித் தலைவர் கருணாநிதி மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், கூட்டுறவுத் துறை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஓ.பன்னீர் செல்வம் திமுகவில் இணைந்ததை தொடர்ந்து பெரியகுளத்தில் அவரது ஆதரவாளர்கள் திமுகவில் இணைந்தனர்



தமிழக முன்னாள் முதலமைச்சரும், அஇஅதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்கழக ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.

அதனைத் தொடர்ந்து அவற்றை வரவேற்று தேனி மாவட்டம் பெரியகுளத்தில் ஓ.பி.எஸ ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். மேலும்

அ.இ.அ.திமு.க தொ.உ.மீ. கழகம் அமைப்புச் செய லாளர் மஞ்சுளா

முருகன், முன்னாள் ஆவின் தலைவர் ஓ.ராஜா, பெரியகுளம் நகர் கழக செயலாளர் அப்துல் சமது, நகர் கழக துணைச் செயலாளர்

ஓ.சண்முகசுந்தரம், பொதுக்குழு உறுப்பினர் தெ.கள்ளிப்பட்டி சிவக்குமார், மாவட்ட எம் ஜி ஆர் அணி செயலாளர் முருகன், நகர அவைத் தலைவர் பன்னீர்செல்வம், வார்டு செயலாளர்கள் சிவக்குமார், சக்தி அய்யனார், சுந்தர், சதீஸ்குமார், நந்தகுமார், கதிரேசன், சேகர், ஈஸ்வரன், செல்லம், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் அன்பு, சார்பு அணி செயலாளர் முத்து வீரன், மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு சையது ஆசிக், அம்மா பேரவை மேல்மங்கலம் அரிசி கடை முத்து, பொறியாளர் ராமநாதன், சேது, பொன்.ரெங்கராஜ், ஜின்னா உட்பட மாவட்ட, நகர ஒன்றிய கழக நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக தொண்டர்கள் உட்பட பலர் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

## திட்டக்குடி அருகே 33 கோடியில் கால்நடை தீவனத் தொழிற்சாலை முதலமைச்சர் ஸ்டாலின் காணொலி வாயிலாகத்திறந்து வைத்தார்



கடலூர் மாவட்டம் திட்டக்குடி அடுத்த ம. பொடையூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி அருகில், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையோரம் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆவின் கால்நடை தீவனத் தொழிற்சாலையை தமிழக முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இத்தொழிற்சாலையின் தொடக்க விழாவை முன்னிட்டு, திட்டக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பால்வளத் துணைப்பதிவாளர் எம். பார்த்திபன் குத்துவிளக்கேற்றி, ரிப்பன் வெட்டி தொழிற்சாலை செயல்பாடுகளைத் தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில் ஆவின் பொது மேலாளர் டாக்டர் வி. அருணகிரிநாதன், உதவிப் பொது மேலாளர் (கால்நடை) டாக்டர் எம். சுப்ரமணி, சி.எஸ்.ஆர். கார்த்திக், பொறியியல் மேலாளர்கள் நேசகுமார், பத்மநாபன், நிதி மேலாளர் ஆனந்த் அண்ணாமலை, சிவில் துணை மேலாளர் எஸ். ஸ்ரீதரன், பொடையூர் இளங்கோவன் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்களும், ஆவின் அதிகாரிகளும், பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டனர். இத்தொழிற்சாலை பயன்பாட்டுக்கு வந்ததன் மூலம் இப்பகுதி கால்நடை வளர்ப்போர் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பயனடைவார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உளுந்தூர்பேட்டையில் 220 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு; எம்.எல்.ஏ. மணிக்கண்ணன் பங்கேற்பு



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலத்துறை சார்பில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட திட்ட அலுவலர் அருணா முன்னிலையில் நடைபெற்ற இவிழாவில், உளுந்தூர்பேட்டை பகுதியைச் சேர்ந்த 220 கர்ப்பிணி பெண்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் பெண்களுக்கு மாலை அணிவித்து, சந்தனம் பூசி, சீர்வரிசை மற்றும் தாம்பூலங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து புளி சாதம், எலுமிச்சை சாதம், தக்காளி சாதம் எனப் பல்வேறு வகையான உணவுகள் வழங்கப்பட்டு மங்கல ஆரத்தி எடுக்கப்பட்டது. பின்னர் அனைவருக்கும் அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் கலந்துகொண்டு வாழ்த்துகளை வழங்கினார். அவருடன் நகரமன்ற துணைத்தலைவர் வைத்தியநாதன், ஒன்றியப்பெருந்தலைவர் ராஜவேல், நகர மன்ற உறுப்பினர் திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ் மாவட்ட மகளிர் அணி கலா, உட்பட உள்ளாட்சி அமைப்பு நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.